**செ.வெ.எண். 1051** **நாள். 29.11.2008**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், இன்று (29.11.2008), காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை 5 மணி நேரம் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட புதுப்பேட்டை, எழும்பூர், புரசைவாக்கம் பகுதிகளில் கடும் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். தாழ்வான பகுதிகளில் வசித்த மக்களை பாதுகாப்பாக பள்ளிக்கூடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து, பேசி, ஆறுதல் கூறி, உணவுப் பொருட்களை வழங்கினார்கள். மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் மழை நீரை வெளியேற்றும் பணிகளை ஆய்வு செய்து, சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகளிடம், தேங்கியுள்ள மழை நீர் அனைத்தையும் உடனடியாக வெளியேற்றுவதற்குரிய பணிகளை துரிதப்படுத்துமாறும் விரைந்து முடித்திடுமாறும் அறிவுறுத்தினார்கள். சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் தேங்கியுள்ள மழை நீரினால் தொற்று நோய் பரவாமல் இருக்க மருந்துகளை தெளித்து சுகாதாரப் பணிகளை திறம்பட செய்திடுமாறு அறிவுறுத்தினார்கள். பாதிக்கப்பட்ட சாலைகளை சரிசெய்யுமாறும், சாலைகளில் சாய்ந்துள்ள மரங்களை உடனடியாக அகற்றி போக்குவரத்தினை சீராக்கிட உத்தரவிட்டார்கள்.

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9